11.12.2018

சி.சி. எண். 152∴15

எ.ம.சா 1 மொக்கராஜ் மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

எங்கள் ஊரில் பிள்ளையார் கோவில் உள்ளது. அந்தபிள்ளையார் கோவில் ஆலங்குளம் திருமங்கலம் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். பிள்ளையார் கோவிலுக்கு கிழக்கில் பாண்டியன் வீடு உள்ளது என்றால் சரிதான். அதன் அருகில் பஞ்சுப்பிள்ளை என்பவர் வீடும் தண்ணிர் தொட்டியும் உள்ளது என்றால் சரிதான். பிள்ளையார் கோவிலுக்கு வடக்கில் ராசு வீடு. சுந்தரம் வீடு ஜெயராஜ் ஆகியோர் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். கோவிலுக்கு மேற்கில் பால் சுந்தன் என்பவர் வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்திற்கும் மேற்கே பால் சுந்தன் வீடுஉள்ளது என்றால் சரிதான். பால் சுந்தன் எனக்கு பங்காளிஉறவு முறையாகும. மணி சுந்தன் எனக்கு பங்காளி உறவு முறையாகும். பால்சுந்தன் மணிக்கு தம்பி மகன் ஆவார். மணி சுந்தன் தம்பி மகன் செல்லையா ஆவார். பிள்ளையார் கோவில் அருகில் உள்ள காலி யிடத்தில் எல்லைக் கல் ஊன்றி இடத்தை பால் சுந்தன் பாதுகாத்து வந்தார் என்றால் சரிதான். கோவிலைச் சுற்றி காலி யிடம் உள்ளது என்றால் சரிதான். கோவிலைச் சுற்றி அரச மரம் வேப்பமரம் சீமைக்கருவேல மரம் உள்ளது என்றால்சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை யாரும் தாக்கி காயம் எதுவும் எற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னது போல் ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தது சம்பந்தமாக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தது சம்பந்தமான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 11.11.2013ம் தேதி 3.00 மணிக்கு நான் பிள்ளையார் கோவிலுக்கு சொந்தமான இடத்தில்அ.சா.1 மணி சுந்தனுக்கு சொந்தமான இடத்தில் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த கற்களை சேதப்படுத்தி அ.சா.1 ஐ அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அரிவாளால் அ.சா.1 ன் இடது கை சுண்டுவிரலில் வெட்டி காயத்தை ஏற்படுத்தி கொலை

மிரட்டல் விடுத்தேன் என்றால் சரியல்ல. வழக்கிலிருந்து என்னை விடுவித்துக்கொள்வதற்காகக முதல் விசாரணையில் பொய்யாக சாடசியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.